உ

கடவுள்துணை.

நமச்சிவாயமாலை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என் சி.

விளம்பரம்.

அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீஸ்கதை, குலோபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் சொலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவது மன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகாஅற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.

கடவுள் துணை.

நமச்சிவாயமாலை.

காப்பு.

மந்திரநமச்சிவாய மாலைநான்செப்புதற்குக்
கந்தவேடனக்குமூத்த கணபதிகாப்புத்தானே.

அருமறை யயனுமாலும் அமாருமுனிவர்தாமும், முறைமுறை வணங்கி யேத்தும் முதல்வனே நமச்சிவாயம். 1

ஆதியாய் வேதநான்காய் அடிமுடி தெரியாதவண்ணஞ், சோதியாய் நிறைவாய்நின்ற துணைவனே நமச்சிவாயம். 2

இணையடி தேடிக்காணு ஏழுலகளந்தமாயன், கணையதா வெயின்மூன்றெய்த கடவுளே நமச்சிவாயம். 3

ஈட்டிய பொருள்போலுன்றன் இணையடிபணிவார் துன்பம், வாட்டிய செம்பொன்மேனி வள்ளலே நமச்சிவாயம். 4

உமையொரு பாகம்வைத்த உம்பர்க டம்பிரானே, அமைதரு மணியேமுத்த அண்ணலேநமச்சிவாயம். 5

ஊனுமா யுயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகித், தாணுவாய்ச் சகத்துக்கெல்லாந் தந்தையா நமச்சிவாயம் 6

எழுபிறப் பதனுன்மாழ்கும் என்னுயிர்க் கிரங்கிவந்து, பழுதற வாண்டுகொள்ளும் பரமனே நமச்சிவாயம். 7

ஏடவிழ் கோதைமாதர் இளமுலை மயக்கப்பட்டு நீடுதலொழிக்கவல்ல நிமலனே நமச்சிவாயம். 8

ஐயமேற்றுண்டாய் பாதம் அன்பிலேன் றலைமேல்வைத்த, செய்யனே வானோர்போற்றுந் தேவனே நமச்சிவாயம் 9

ஒன்பது வாயிற் கூட்டில் ஒடுங்குயிருய்யும் வண்ணம், பொன்பொதி மலர்த்தாள் காட்டும் புனிதனே நமச்சிவாயம். 10

ஓமெனு மெழுத்தினுள்ளே ஒளியதாய் விளங்குகின்ற, வாமனே கருணைநல்கும் வள்ளலே நமச்சிவாயம்.

ஒளவியம் பேசாவண்ணம் அடிமையைத் தடுத்தாட்கொள்ளுந், திவ்வியமணியேமுத்தே தேவனே நமச்சிவாயம். 12

அக்கினைப் பூண்டு கொண்டே அரிய வெண்ணீறு பூசுஞ், சொக்கனே செக்கர் மேனித் தூயனே நமச்சிவாயம். 13

கம்பமார் களிறுரித்த கச்சியேகம்பா செம்பொன், அம்பலத்தாடுகின்ற அண்ணலே நமச்சிவாயம். 14

நகரம்போல் வளைந்துழன்று நாயினே னுணவுதேடும், பகரொணுவின்னறீர்க்கும் பரமனே நமச்சிவாயம்.

சத்தியுஞ் சிவமுமாகித் தானுவாய் சகத்துக்கெல்லா, முத்தியேயளிப்பாயாதி முதல்வனே நமச்சிவாயம்

ஞமனுடனிந்திரற்கும் நாரணற் காரணற்குஞ், சமனுறமுதலாய்நின்ற தாணுவே நமச்சிவாயம் 17

இடவியகபாலமேந்தி ஏழிரண்டுலகமெல்லாந், தடவியுங் காணவொண்ணுச் சங்கரா நமச்சிவாயம். 18

இணங்கிய கமலப் பொற்றுள் இருவரு மேத்திநின்று, வணங்கவம் பலத்துளாடும் வானவ நமச்சிவாயம். 19

தண்டமிழ் முனிவன் றன்னைச் சமமுறத் தென்பாலேவும், அண்டரோ டயன்மால்காணு ஆதியே நமச்சிவாயம். 20

நஞ்சணி கண்டத்தானே நதிமதிச் சடையினாலே கொஞ்சு பச்சிளம்பெண் பாகங் கொண்டவா நமச்சிவாயம். 21

பண்டுல களந்த மாலும் பங்கயத் தயனுந் தேடிக், கொண்டுசென் றறியவொண்ணாக் குறவனே நமச்சிவாயம். 22

மங்கையோர் பாகம்வைத்து வளர்பிறை முடிமேல் வைத்துச், செங்கையின்மழுமான்வைத்த தேவனே நமச்சிவாயம். 23

இயக்கரு முனிவர்தாமும் இருகரங்குவித்துநின் றுவியக்கவம்பலத்திலாடும் விமலனே நமச்சிவாயம். 24

அரகர சிவனேயென்றும் அம்பலத் தாடியென்றும், பரவுவார் துயரந்தீர்க்கும் பரமனே நமச்சிவாயம். 25

இலவிதழ் மடவார்தங்கள் எவனுக்குரியனாகி, அலமருமென்னையாண்ட அமலனே நமச்சிவாயம். 26

வளமுறு மங்கைதன்னை மற்றிடப்பாகம்வைத்தே, ஒளிமதிக் கீற்றைச்சூடும் ஒருவனே நமச்சிவாயம். 27

அழகிய முருகனுக்கோ ராறுமா முகமுங் கூர்மை, பழகியவேலுமீந்த பரமனே நமச்சிவாயம். 28

இளமையு மூப்புமில்லா இறைவனே யெம்பிரா மனே, வளமையாங் கருணை மோன வள்ளலே நமச்சி வாயம். 29

அறவனே பாதந்தேடி அன்றிருவோரும் காணா இறைவனே யென்னைக்காக்கும் ஈசனே நமச்சிவாயம்.

அனந்தலி னின்றுள்போற்றி அருச்சிக்கு மடியார் தங்கள், இனந்தனி லென்னைவைப்பாய் ஈசனே நமச்சி வாயம். 31

கரியுரி யதனைப்போர்த்துக் கபாலமுங் கையிலேந் தித் திரிபுரதகனஞ்செய்ய தேவனேநமச்சிவாயம். 32

காலனையுதைத்தகாலா காமனையெரித்தகண்ணா பா லனைக்கறியதாக்கும் பரமனே நமச்சிவாயம். .. 33

கிளிமொழி கிடைநேர்செவ்வாய் கௌரியைப்பாக ம்வைத்த, ஒளிமதிச் சடையினானே யொருவனே நமச் சிவாயம். 34

கீண்டுவெற்பெடுத்தவீரக் கேடிலாவரக்கன் றன்னை, மாண்டுக விரலாலூன்றும் வள்ளலே நமச்சிவாயம். 35

குழைகுமி ழடருக் கண்ணாள் கோதையைப் பிரி ந்தபோது, பிழைசெயு மதனைக்காய்ந்த பிஞ்ஞகா நமச்சி வாயம். 36

கூவிளமறுகுதும்பை கொன்றைறவெள் ளெருக்கூம த்தை, மேவியசடையினுனே வித்தகாநமச்சிவாயம் 37

சங்கையைச் சடைமேல் வைத்துக் கௌரியைப் பாகம்வைத்த, அங்கணு நீதியோசொல் ஐயனே நமச்சிவாயம். 38

பசுவன் வணங்கிக்கண்ணுங் கேழ்கிளற் கஞ்சஞ்சூட்ட, ஆதியிலாழியீந்த அறைவனே நமச்சிவாயம். 39

கைச்சிலை மேருவாக கரியமால் பகழியாக, உச்சித ப்புவித்தேருரும் ஒருவனே நமச்சிவாயம். 40

கொற்றவன் றனக்கு முன்னே குதிரையிலேறிக் காட்டிப் பொற்றுகில் கோலாற்கொள்ளும் பூரணு நமச்சிவாயம். 41

கோணமா மலையில் வாழுங் கோதிலா வாதியேநீ ஆணல்லைபெண்ணுமல்லை அத்தனே நமச்சிவாயம். 42

சந்திரன் விளங்குஞ் சென்னித் தலைவனே தம்பிரானே, இந்திர னிமையோர் போற்றும் இறைவனே நமச்சிவாயம். 43

சாந்தணி முலையாடன்னைத் தன்புல னெனப்பேர் மாற்றி, வந்து செஞ்சடை யெம்மானே இறைவனே நமச்சிவாயம். 44

சிரமது கையிலேந்திச் சீரிய முனிவர்தங்கள், வின்னை யழித்தமேரு வில்லியே நமச்சிவாயம். 45

சீதள கமலவாவித் திருநாவ லூரன்றன்னைச், சாதனங்காட்டியாண்ட தாணுவே நமச்சிவாயம். 46

சுத்தவெண்ணீறுபூசிச் சுடலையி நடனமாடும், அத்தனேயாரூர்வாழும் அண்ணலே நமச்சிவாயம். 47

சூரியன்றுயரந்தீர்த்தாய் தோன்றி முப்புரத்தைச் சுட்டாய், ஆரிய வெள்ளிவெற்பின் அத்தனே நமச்சிவாயம் 48

செஞ்சிலைக் கையிலேந்திச் சிரித்து முப்புரமெரித்தாய், தஞ்சமென் றணைபடைந்தேன் தாணுவே நமச்சிவாயம். 49

சேதன வடியாரோடு திருப்பெருந் துறையில்வந்து, வாதவூரரைமுன்னுடன் வரதனேநமச்சிவாயம். 50

சைவனே யைம்புலன்க டமைமனஞ் சாராவண்ணங், கைவரமருளவேண்டுங் கடவுளே நமச்சிவாயம்.

சொரிமலர்க் கொன்றைதும்பை சொல்லிய வறுகுதாளி, விரிமலர்ச் சடையாய் வெள்ளி வெற்பனே நமச்சிவாயம். 52

சோலைசூ ழாலவாயிற் சோதியே நமனைமாய்க்கப், பாலனுவாயினர்காக்கப் பரிந்தரு ஈமச்சிவாயம். 53

தந்தையுந் தாயு மில்லாத் தாணுவே யாண்பெண் ணல்லாய், இந்திரனயன்மால்போற்றும் இறைவனே நமச்சிவாயம். 54

தாதவிழ் கொன்றை தும்பை சங்கொடு தலையுங் கொண்ட, நாதனே வேதமோது நண்பனே நமச்சிவாயம். 55

திரிபுரமெரித்தமூர்த்தி தென்னவன் முன்னேமுன்னாள், நரிதனைப்பரியதாக்கு நம்பனேநமச்சிவாயம். 56

தீதிலா வாதவூரர் செங்கைகண் டுளமகிழ்ந்த, நாதனேபரனேவானோர் நண்பனே நமச்சிவாயம். 57

துணைபவனே யன்பர் தங்கள் றுன்பறுத் தருளுமூர்த்தி, பணைமுலை யுமையாள்பாகா பரமனே நமச்சிவாயம். 58

தூதுசுந்தரற்காச் சென்ற சோலைசூ ழாரூரையா, ஆதியேபரனேவெள்ளி யசலனேநமச்சிவாயம்.. 59

தென்னவ னுகக்கூடல் சேர்ந்து செங்கோல் செலுத்தி, அங்கர் தன்னை யாண்ட அமலனே நமச்சிவாயம். 60

தேடியே யிருவர்காணுத் திருவடி மனத்துள்யாரும், நாடியேவணங்கநின்ற நம்பனே நமச்சிவாயம். 61

தையலோர் பாகம் வைத்துச் சடையிலே கங்கை வைத்த, ஐயனேயாரூர்வாழும் அண்ணலேநமச்சிவாயம்.

தொல்லுல கெல்லாம் போற்றுஞ் சோதியே சூல பாணி, வில்லெனமேருவாங்கும் வித்தகா நமச்சிவாயம்.

தோத்திரஞ்செய்யுமாற்குச் சுடரொளியாழியீந்த, அத்தனே யடியாரன்பிற் களியனே நமச்சிவாயம். 64

நஞ்சினை யருந்திமாய னுன்முகன் முதலோர்நாண, அஞ்செழுத் துருமான அத்தனே நமச்சிவாயம். 65

நாரண னலரோ னிந்த்ரன் நாடிமுன்வணங்கி நின்றே, ஆரணமோதுகின்ற ஆதியே நமச்சிவாயம். 66

கற்பவர் நெறியைநோக்கி செஞ்சைவிட் டகலாதானே நிற்பனைகடந்தசோதிச் கடவுளே நமச்சிவாயம். 67

நீறணி மேனியானே நிமலனே யமரர்கோவே, ஆறணிசடையினனே அண்ணலே நமச்சிவாயம். 68

நுண்ணிடைமாதுபாகா நோக்குவார் தம்மைநோக்குங், கண்ணுதற் பரனேயெங்கள் கடவுளே நமச்சிவாயம். 69

நூபுறபதமாதோடு நுவலருஞ் சபையிலாடும், மாபுரத்தவர்கள்காலா வானவா நமச்சிவாயம். 70

நெஞ்சகமலரிலுன்னை நினைபவ நினைந்தபேருக் கஞ்சலென் றருளிச்செய்யும் அண்ணலே நமச்சிவாயம். 71

நேத்திரந் தன்னால்வேளை நெருப்பெழச் சுட்டுவிட்டால், சாத்திர முனிவோர்போற்றுந் தாணுவே நமச்சிவாயம். 72

நைந்துனை நினைப்பார் பாவம் நாசமதாக்கிநிற்பாய், பைந்தொடிபாகங்கொண்ட பரமனே நமச்சிவாயம். 73

நொந்தவ ரிளைத்தோர் தமை நொடியளவினில் வாழ்விக்கும், கந்தர வ கறுத்தமூர்த்தி கடவுளே நமச்சிவாயம. 74

நோக்கமூன் றுடையாயென்னை நோக்கியே துரியாதீதத், தூக்கத்தில் வைப்பதென்றோ சொல்லுவாய் நமச்சிவாயம். 75

நவ்வியையேந்துங்கையாய் நயமுடனடியார்தங்கள் வெவ்வினையெல்லாந்தீர்க்கும் விமலனேநமச்சிவாயம். 76

பத்தராய்ப் பணிவார்தம்மைப் பதங்கொடுத்தாளுமையா, சுத்தனே வேதஞ்சொன்ன துணைவனே நமச்சிவாயம். 77

பாடுவார் மூவர் தம்மைப் பதங்கொடுத் தாண்ட மூர்த்தி, தேடுவார் தேடுகின்ற செம்பொன்னே நமச்சிவாயம். 78

பிறையணி சடையினனே பிஞ்ஞகா வடியர்க்கெல்லாம், குறைவற வாழ்வளிக்குங் கொற்றவா நமச்சிவாயம். 79

பீடுறப் பூசிப்பார்தம் பெருவினை யறக்குமூர்த்தி, ஆடல்சேரெறுதிலேறும் அண்ணலே நமச்சிவாயம். 80

புகலருங் கல்லாலன்பு பூண்டெறி சாக்கியர்க்குத், தகவுறமுத்திநல்குந் தாணுவே நமச்சிவாயம். 81

பூசுவெண்ணீருபொங்க பொருவிலா வம்மைகாண நேசமோடாலங்காட்டில் நிருத்தஞ்செய் நமச்சிவாயம்.

பெண்ணமு தனையார்நாணும் பெட்புறவளையுந்தூசும், எண்ணுற பாவியாக்கொண்ட இறைவனே நமச்சிவாயம். 83

பேயுடன் காட்டிலாடும் பிஞ்ஞகா பெரியோர் தங்கள், தூயநன்மனத்துளான சுத்தனே நமச்சிவாயம். 84

பையரவணையிளறுஞ்சும் பாரளந்தோர்க்குப்பாதி,
மெய்யளித்தருள்கூர்ந்திட்ட விண்ணவா நமச்சிவாயம்.

பொசியுறு தேம்பூஞ்சோலைப் புகலிவாழ் பிள்ளையார்க்கு, சசியொளிர் முத்தின்பந்தர் தந்தவா நமச்சிவாயம். 86

போதக மாகிவந்த புன்மைசே ரரக்கன் றன்னை,
நோதக வுரித்துப்போர்த்த நுண்ணியா நமச்சிவாயம்.

பௌவத்திற் சிலையோடாழும் படியமண் செய்யவப்பர்க், கெவ்வமதகற்றிபேற தீந்தவா நமச்சிவாயம்.

மறுவறுமாதுசைவ மரபிற் சுந்தரக்குத் தூதாய்ச்,
செறிநிசி பரவையாயிற் சென்றவா நமச்சிவாயம். 89

மான்மழு கையிலேந்தி வன்னியோர் பாகம்வைத்தே, ஆன்மிசையேறுஞ்சோதி ஐயனேநமச்சிவாயம். 90

மிடற்றினிற் காளகூட விடத்தினைக் கறுக்கவைத்தாய், நடத்தினில் விருப்பம்வைத்தாய் நம்பனே நமச்சிவாயம். 91

மீனென வந்தமாயன் விழியினை யிடந்துசாத்த ஆனதோர்நேமிநல்கும் அண்ணலே நமச்சிவாயம். 92

முன்னமே பிரமன்றன்னை முனிந்ததோர் தலையறுத்தாய், என்னைவந் தாண்டுகொள்வாய் ஈசனே நமச்சிவாயம். 93

மூர்க்கனுந் தக்கன் வேள்வி முன்புசென் றழித்து வெற்றி, மார்க்கங்கண் டிட்டசோதி வானவா நமச்சிவாயம். 94

மெலிவிலாத் தவத்தோர்கோப மேலுறமுன்னாள் விட்ட புலிதனை யுரித்துப்போர்த்த புண்ணியா நமச்சிவாயம். 94

மேயபேருணர்விற்கெட்டா வெளியதா யணுவுமாகி, ஆயசிற்சொரூபமான அண்ணலேநமச்சிவாயம். 96

மையுறு குழலாள் கூடன் மங்கையர்க்கரசியார்முன், செய்யுநற்பணிக்குவந்த தேவனேநமச்சிவாயம். 97

மொழிதரு நால்வர்தங்கள் முதுமறைத்தமிழ்ப்பாமாலை, ஒழிவின்றிச் சூடிக்கொள்ளும் ஒருவனே நமச்சிவாயம். 98

மோகினி வடிவங்கொண்ட முகில்வண்ணன் றன்னைச்சேர்ந்து, சோகமிலையனுரைத் தோற்றியோய்நமச்சிவாயம். 99

மௌவலங் குழலார்மோக வலைபறுத்துயர் சித்தாந்தச், செல்விதா முத்தி யென்று சித்திக்கும் நமச்சிவாயம். 100

நமச்சிவாயமாலை

முற்றிற்று.